JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**A1 to A4 absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the 6th day of 10.02.2026.

**C.C. 277/2010** **Name**: ரஞ்சித்குமார் **S/o**. சின்னச்சாமி **P.W**. 2

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** திருடு போன கடையின் பெயர் என்னவென்றால் ராதா வெள்ளி மாளிகை ஆகும். கடையின் உரிமையாளர் அ.சா.1 சத்தியமூர்த்தி மற்றும் 2 – 3 பேர் இருந்தார்கள். திருட்டு போன சமயத்தில் எத்தனை பேர் பணிபுரிந்தோம் என்றால் 2 – 3 பேர் பணிபுரிந்தோம். போலீசார் விசாரணையில் பணிபுரிந்த நபர்களில் யார் பொருட்களை எடுத்துக் காட்டினோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் 4 – 5 பெண்கள் கடைக்கு வந்ததாக சொல்லி உள்ளேன் அவர்களின் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு வருகை பதிவேடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் யார் இருந்தார்கள் என்ற விவரம் வருகை பதிவேட்டினை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். திருட்டு போன கொலுசுக்கு முத்திரை இருக்கும் என்றால் சரிதான்.

2. போலீசாரின் விசாரணையில் கொலுசின் முத்திரை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சொல்லித்தான் நகையின் எடையின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கொலுசின் மாடல் பற்றி எனக்கு தெரியாது. 107 கொலுசு காணாமல் போனதாக சொல்லி உள்ளேன். 107 கொலுசுகளின் மாடல் மற்றும் ஒவ்வொன்றின் வகை குறித்து சொல்ல முடியாது என்றால் சரிதான். ஒயர் கூடையில் பொருள்களை எடுத்துச் சென்றதாக சொல்லப்பட்ட பெண்ணின் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு போலீசார் விசாரணைகள் சொல்லவில்லை என்றால்

**சரிதான். நான் காவல் நிலையத்திற்கு செல்லும்போது ஐந்து பெண்கள் கொடுமுடி காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். அடையாளம் அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 எனது உரிமையாளர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை